# வலயக் கல்வி அலுவலகம்- வவுனியாவடக்கு

க.பொ.த (உ/த) -2020

**பாடம்:- பொருளியல்** **தரம்-13** **நேரம்:- 3 மணித்தியாலயம்**

---

**பகுதி – II**

உப பிரிவு 'அ' உப பரிவு 'ஆ' என்பவற்றிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

**உப பிரிவு 'அ'**

(01)

i. உதாரணங்களைப் பயன்படுத்தி பொருளாதார வளங்களுக்கும் பொருளாதாரமல்லா வளங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக? (04 புள்ளிகள்)

ii. நாடொன்றின் மனித வளத்தின் விளைதிறனை மேம்படுத்த மேற்கொள்ளப்படக் கூடிய நடவடிக்கைகள் எவை? (04 புள்ளிகள்)

iii. பொருளாதார முறையொன்றின் செயற்பாடுகள் யாவை? (04 புள்ளிகள்)

iv. உற்பத்தி வளங்களைப் பயன்படுத்தும்போது கூடிச் செல்லும் அமையச் செலவு ஏற்படுவதற்கான காரணங்கள் எவையென விளக்குக? (04 புள்ளிகள்)

v. பின்வரும் விடயங்களை உற்பத்திச் சாத்திய வளையியில் குறித்துக் காட்டுக?

அ. வேலையின்மை அதிகரித்தல் இ. பொருளாதாரப் பின்னடைவு

ஆ. பொருளாதா வீழ்ச்சி ஈ. அமையச்செலவு

02)

i. ஒரு சாதாரண பொருளின் தனிநபர் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை? (04 புள்ளிகள்)

ii. மற்றவை மாறாத நிலையில் பண்டம் ஒன்றின் விலையில் ஏற்படும் மாற்றம் நுகர்வுச் செலவில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதைக் கொண்டு குறித்த பண்டத்தினது நெகிழ்ச்சித் தன்மையை வரையறுக்கு முடியுமா? விளக்குக? (04 புள்ளிகள்)

iii. ஒரு தொழிலில் ஈடுபட்டு நிரம்பல் செய்வதற்கு நபர் ஒருவர் எத்தகைய அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும்? (04 புள்ளிகள்)

iv. எல்லாப் பண்டங்களும் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி தொடர்பில் சமமான பெறுமதிகளைக் கொண்டிருக்காமைக்கான காரணங்கள் எவை? (04 புள்ளிகள்)

v. நுகர்வோர்மிகை மற்றும் உற்பத்தியாளர் மிகை என்பவற்றை வேறுபடுத்துக? (04 புள்ளிகள்)

03) போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் ஒரு பொருளுக்கான கேள்வி நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

$Qd = 300 - 4P \quad Qs = -90 + 6P$

i. இப்பொருளுக்கான சமநிலை விலையையும் சமநிலைத் தொகையையும் காண்க? (02 புள்ளிகள்)

ii. சந்தைச் சமநிலையில் நுகர்வோன் மிகை யாது? (03 புள்ளிகள்)

iii. சந்தைச் சமநிலையின்போது விலைக் கேள்வி நெகிழ்ச்சி, விலை நிரம்பல் நெகிழ்சிகளைக் கணிப்பிடுக? (04 புள்ளிகள்)

iv. இந்நிலையில் இப்பொருளின் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் அலகொன்றுக்கு ரூபா 5 மானியம் வழங்கத் தீர்மானிப்பதாகக் கொள்க.

அ. மானியத்தின் பின் புதிய நிரம்பல் சமன்பாடு யாது? (02 புள்ளிகள்)

ஆ. மானியம் வழங்கப்பட்ட பின்னர் இப்பொருளின் சமநிலை விலையையும் சமநிலைத் தொகையையும் கணிப்பிடுக? (02 புள்ளிகள்)

இ. மானியத்தினால் அரசிற்கு ஏற்பட்ட செலவு யாது? (02 புள்ளிகள்)

ஈ. மானியத்திற்கு பின் உற்பத்தியாளன் மிகையை கணிப்பிடுக? (03 புள்ளிகள்)

உ. மானியம் காரணமாக சமூக நலனில் ஏற்படும் பாதிப்பைக் கணிப்பிடுக? (02 புள்ளிகள்)

04)

i. குறுங்கால உற்பத்தி நிறுவனத்தின் சராசரி உற்பத்திக்கும் சராசரி மாறும் செலவுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக? (04 புள்ளிகள்)

ii. அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவுகள் என்றால் என்ன? அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

iii. எல்லைச் செலவு என்றால் என்ன? நிறுவனமொன்றின் குறுங்கால உற்பத்திக்கான எல்லைச் செலவு எத்தகைய போக்கினைக் கொண்டதாக அமைகின்றது? (04 புள்ளிகள்)

iv. நிறைபோட்டிச் சந்தை தனியுரிமைப் போட்டிச் சந்தை ஆகியவற்றின் பிரதான பண்புகளை பட்டியல்படுத்துக? (04 புள்ளிகள்)

v. நிறைபோட்டி நிறுவனமொன்றின் வரவுகள் மற்றும் செலவுகள் தொடர்பான தரவுகள் வருமாறு.

| வகை | தொகை (ரூபா) |
|---|---|
| மொத்த வருமானம் (TR) | 45 000 |
| உற்பத்தியாளன் மிகை | 23 000 |
| சராசரி மொத்தச் செலவு (ATC) | 40 |
| எல்லைச் செலவு (MC) | 45 |

அ. நிறுவனத்தின் வெளயீட்டின் பெறுமதி யாது? (02 புள்ளிகள்)

ஆ. சராசரி மாறும் செலவின் பெறுமதி யாது? (02 புள்ளிகள்)

05)

i. வர்த்தக சகடவோட்டம் ஒன்றின் பூரித்த நிலைப்புள்ளி தாழ்வு நிலைப் புள்ளி என்பவற்றின் முக்கிய பண்புகளை விளக்குக? (04 புள்ளிகள்)

ii. தேசியக் கணிப்பீட்டில் பல் கணிப்பீட்டு முறையினை உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக? (04புள்ளிகள்)

iii. அடிப்படை விலை தரப்பட்டுள்ளதாக கருதுக. கொள்வனவாளர் விலையைக் கணிப்பிடுவதற்கு தேவைப்படும் மேலதிக தகவல்கள் யாவை? (04 புள்ளிகள்)

iv. திறந்த பொருளாதாரம் தொடர்பான தரவுகள் பில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளன.

நுகர்வுத் தொழிற்பாடு C = 200 = 0.8 Yd

வரி T = 200

முதலீடு I = 500

அரச கொள்வனவுகள் G = 300

ஏற்றுமதி X = 200

இறக்குமதி M = 100

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக?

அ. இப்பொருளாதாரத்தின் கேள்விச் சமன்பாடு (02 புள்ளிகள்)

ஆ. வரிப் பெருக்கி, செலவுப் பெருக்கி (02 புள்ளிகள்)

இ. சமநிலை மொத்த உள்நாட்டு உற்பத்தி (02 புள்ளிகள்)

ஈ. நிறைதொழில் மட்ட வருமானம் 6000 பில்லியன் ரூபாவாகும். அதனை அடைய அதிகரிக்கப்பட வேண்டிய முதலீடு (02 புள்ளிகள்)

## உப பிரிவு – ஆ

06)

i. பின்வரும் காரணிகள் பணத்திற்கான கேள்வியில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை விளக்குக?

அ- மெய்வருமானம்

ஆ- பொது விலை மட்டம்

(04 புள்ளிகள்)

ii. ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($m_2b$) என்றால் என்ன? அதனைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

(04 புள்ளிகள்)

iii. இலங்கையில் பொதுவிலை மட்ட மாற்றங்களை குறித்துக் காட்டப் பயன்படுத்தப்படும் அளவைகள் எவை?

(04 புள்ளிகள்)

iv. 10 சதவீத ஒதுக்குத் தேவையின் கீழ் செயற்படும் ஒரு வணிக வங்கியின் மொத்த வைப்புக்கள் 1600 மில்லியன் ரூபா. இதில் ஒதுக்குகள் 200 மில்லியன் ரூபா. மிகுதி வழங்கப்பட்ட கடன்களாகும்.

அ - குறித்த வங்கியிடம் உள்ள மிகை ஒதுக்கின் அளவைக் கணிப்பிடுக?

ஆ – குறித்த வங்கி மிகை ஒதுக்கு முழுவதையும் கடனாக வழங்குமாயின் புதிதாக வழங்கப்பட்ட கடன்களுக்கான காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்படாத நிலையில் வங்கியின் ஐந்தொகையினை தயாரிக்குக? (04புள்ளிகள்)

v. மத்திய வங்கியின் தற்கால நிதிக் கொள்கை சட்டகத்தின் பிரதான நோக்காகிய நாணய இலக்கிடல் என்பது யாது? (04 புள்ளிகள்)

07)

i. மேன்மைப் பண்டம், மேன்மையற்ற பண்டம், பொதுப்பண்டம், பொது வளம் ஆகியவற்றின் பண்புகளை விபரிக்குக?

(04 புள்ளிகள்)

ii. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரிகள் காரணமாக சந்தைகள் எவ்வாறு தோல்வி அடைகின்றன என்பதை பொருத்தமான வரைபடம் ஒன்றைக் கையாண்டு விளக்குக?

(04 புள்ளிகள்)

iii. நியாயமான வரி முறைக்கான

அ – பிரதிபலன் தொடர்பான தத்துவம்

ஆ – செலுத்தும் தகுதி தத்துவம் என்பவற்றின் கருத்தினை சுருக்கமாக விளக்குக?

(04 புள்ளிகள்)

iv. இலங்கை அரசாங்கத்தின் மீளெழும் செலவினங்களின் பிரதான உள்ளடக்கங்களைத் தருக?

(04 புள்ளிகள்)

v. வரி விதிப்பின் நோக்கங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

08)

i. முழுநன்மை மற்றும் ஒப்பீட்டு நன்மை என்பவற்றை வரையறுக்குக?

(04 புள்ளிகள்)

ii. ஒவ்வொரு நாட்டிலும் ஓரலகு உழைப்பினால் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தி அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் 100 உழைப்பு அலகுகள் உள்ளன எனக்கொள்க

| நாடு | வானொலி | கணினி |
|---|---|---|
| இந்தியா | 4 | 10 |
| சீனா | 1 | 5 |

அ. வானொலி மற்றும் கணினி என்பவற்றை உற்பத்தி செய்யும்போது ஒப்பீட்டு நன்மையை எந்நாடு கொண்டுள்ளது?.

(02 புள்ளிகள்)

ஆ. இரு நாடுகளினதும் உற்பத்தி சாத்திய வளையியினைக் காட்டி ஒப்பீட்டு நலனை அடிப்படையாகக் கொண்டு பூரண சிறப்புத்தேர்ச்சியுடன் உற்பத்தி செய்யப்படுமாயின் ஒவ்வொரு நாட்டினதும் உற்பத்திச் சேர்க்கையினை சாத்திய வளையியில் காட்டுக?

(02 புள்ளிகள்)

இ. ஒப்பீட்டு நலன் அடிப்படையிலான சிறப்புத்தேர்ச்சியின் பின்னர் 100 வானொலி, 400 கணினி பரிமாற்றிக்கொள்ளும் போது ஒவ்வொரு நாட்டினதும் நுகர்வு சாத்திய வளையியினை வரையப்பட்ட உற்பத்தி சாத்திய வளையி வரைபடத்தில் காட்டுக?

(02 புள்ளிகள்)

ஈ. இரண்டு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மைகிடைக்கும் வெளிநாட்டு பரிமாற்று வீதத்தைக் காண்க?

(02 புள்ளிகள்)

iii. நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தின் போக்குகளை தீர்மானிக்கவல்ல பொருளியற் காரணிகளை விளக்குக?

(04 புள்ளிகள்)

iv. நிலையான நாணயமாற்று வீதத்தின் நன்மை, தீமைகளை குறிப்பிடுக?(04 புள்ளிகள்)

09)

(i) பொருளாதார வளர்ச்சியை வரைவிலக்கணப்படுத்தி பொருளாதார வளர்ச்சியின் மிக முக்கியமான மூலாதாரங்களைக் குறிப்பிடுக?

(05 புள்ளிகள்)

(ii) நாடொன்றினது பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் நோக்குடன் அரசினால் எவ்வாறான பங்களிப்புக்களை வழங்கலாம்?

(04 புள்ளிகள்)

(iii) வருமானப்பரம்பல் ஏற்றத்தாழ்வினை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் நியதிகள் மற்றும் வறுமையை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நியதிகளை வேறுவேறாகக் காட்டுக?

(05 புள்ளிகள்)

(iv) ஒப்பிட்டளவில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் மத்தியில் உயர் வேலையின்மை காணப்படுவதற்கான காரணங்கள் எவை?

(05 புள்ளிகள்)

10)

(i) உயர் வளர்ச்சியை அடைவதற்கு தடையாக இலங்கைப் பொருளாதாரத்தில் காணப்படக்கூடிய அடிப்படைப் பலவீனங்களை இனங்காண்க?

(05 புள்ளிகள்)

(ii) இலங்கையின் சுற்றுலா கைத்தொழில் எதிர்நோக்கும் சவால்களையும் அதனை விருத்திசெய்வதற்கான சிபாரிசுகளையும் குறிப்பிடுக?

(05 புள்ளிகள்)

(iii) இலங்கையின் கைத்தொழில்துறையில் உயர்வான வளர்ச்சியை ஏற்படுத்த மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எவை?

(05 புள்ளிகள்)

(iv) இலங்கை அறிவு சார் பொருளாதாரத்தை நோக்கி செல்வதில் எதிர்நோக்கும் சவால்கள் எவை?

(05 புள்ளிகள்)